# பெண் தலைமைக் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்: நிந்தவூர்ப் பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய விஷேட ஆய்வு

**Supervisor**
*Mrs. AWF. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. MYM. Munawwara,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

பொருளாதார ரீதியாக ஏற்பட்ட மாறுதல்களும் முன்னேற்றங்களும் சமூகங்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. பொருளாதார முன்னேற்றங்களோடு இணைந்த வகையிலான பெண்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் உலகளாவிய ரீதியில் உரிமைகள்இ சமத்துவம் எனும் எண்ணக்கருக்களை தோற்றுவித்துள்ளன. குறிப்பாக தான் சார்ந்த குடும்பத்திற்கான பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் எதிர்பார்ப்பு மிக்க ஒன்றாகவே காணப்படுகிறது.சில சமூக யதார்த்தங்கள்இ சூழ்நிலைகள் பெண்கள் குடும்பத்தை வழிநடாத்த வேண்டிய முழுப் பொறுப்பினையும் தனித்து செயலாற்ற வேண்டிய நிலைமைகளையும் தோற்றுவித்து விடுகின்றன. இந்தவகையில் அமையும் குடும்பங்களை பெண் தலைமைக் குடும்பங்கள் என்கிறோம். "இன்று இலங்கையில் 20% ஆன குடும்பங்கள் பெண் தலைமையிலான குடும்பங்களாகும். இது 5:1 எனும் வகையில் அமைந்துள்ளது."(Daily News, 2003, March, 25). இத்தகைய குடும்பங்கள் வறுமை ஒழிப்பு , சமூக அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அக்குடும்பங்களிற்கான ஆலோசனை, வழிகாட்டல் என்பனவும் அபிவிருத்தியோடு இணைந்ததாக மேற்கொள்ளப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நிந்தவூர்ப் பிரதேசத்தில் காணப்படும் 8601 குடும்பங்களில் பெண் தலைமையிலான குடும்பங்களை இவ்வாய்வு அடையாளங்காண முயற்சித்துள்ளது. இத்தகைய குடும்பங்கள் சமூகத்தில் தனக்கான அந்தஸ்த்தை தக்க வைத்துக் கொள்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றன. இத்தகைய பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்கண்டு அவற்றிற்கான மும்மொழிவுகளை விதந்துரைக்க இவ்வாய்வு முனைந்துள்ளது. அதிகரித்துவரும் பொருளாதார, சமூக சிக்கல்களுள் பெண் தலைமையிலான குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார ரீதியான சவால்கள் என்ன என்பதை கண்டறிவதே இவ்வாய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாய்வின் நோக்கங்களாக: பெண் தலைமையிலான குடும்பங்களின் பின்னணியைக் கண்டறிதலும் அக்குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை அடையாளப்படுத்தலும், பெண் தலைமையிலான குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களிலிருந்து மீள எத்தகைய யுக்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைக் கண்டுகொள்ளல் என்பவற்றைக் கொள்கிறது. இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), பேட்டி காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக்குழுவுடனான கலந்துரையாடல், (Focus group Disscussion) போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளன. 30 வினாக் கொத்துக்கள் பெண் தலைமைக் குடும்பங்களிடம் பனிப்பந்து மாதிரியைப்

பயன்படுத்தி வழங்கப்படவுள்ளன. 03 பேர் பிரதான தகவலாளர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். 02இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவு சேகரித்தலில், பிரதேச செயலக அறிக்கைகள், சமூக அய்வு மைய வெளியீடுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு எண்ணளவிலான மற்றும் தர அளவிரான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***Key words:*** பெண் தலைமைக் குடும்பங்கள், பெண் வலுவூட்டல், வாழ்வாதார அபிவிருத்தி.